எண்:18 /2024 நாள்: 31.01.2024

**தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்**
**எண்.3, தேர்வாணையச் சாலை , சென்னை – 600 003.**
**செய்தி வெளியீடு**

தமிழ்நாடு வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி சார்நிலைப் பணியில் அடங்கிய உதவி பயிற்சி அலுவலர் (சுருக்கெழுத்து–ஆங்கிலம்) மற்றும் தமிழ்நாடு பொது சார்நிலைப் பணியில் அடங்கிய இளநிலை தொழில்நுட்ப உதவியாளர் பதவிகளுக்கான காலிப்பணியிடங்களுக்கு நேரடி நியமனம் செய்யும் பொருட்டு தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், 18.07.2023 நாளிட்ட அறிவிக்கை எண் 14/2023–ன் வாயிலாக விண்ணப்பங்களைக் கோரியிருந்தது. இப்பதவிக்கான எழுத்துத்தேர்வு கடந்த 05.10.2023 மு.ப. (ம) பி.ப. மற்றும் 06.10.2023 மு.ப. அன்று நடைபெற்று, எழுத்துத்தேர்வில் விண்ணப்பதாரர்கள் பெற்ற மதிப்பெண் மற்றும் தரவரிசை விவரங்கள் 28.11.2023 அன்று தேர்வாணைய இணையதளத்தில் வெளியிடப்பட்டது.

தமிழ்நாடு வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி சார்நிலைப் பணியில் அடங்கிய உதவி பயிற்சி அலுவலர் (சுருக்கெழுத்து–ஆங்கிலம்) மற்றும் தமிழ்நாடு பொது சார்நிலைப் பணியில் அடங்கிய இளநிலை தொழில்நுட்ப உதவியாளர் பதவிகளுக்கான மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பு 08.02.2024 மு.ப. அன்று தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், எண் 3, தேர்வாணையச் சாலை (பிராட்வே பேருந்து நிலையம் மற்றும் கோட்டை ரயில் நிலையம் அருகில்), சென்னை–600 003 ல் உள்ள தேர்வாணைய அலுவலகத்தில் நடைபெற உள்ளது.

மேற்படி மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பிற்கு அழைக்கப்படும் விண்ணப்பதாரர்களின் மதிப்பெண்கள் / ஒட்டுமொத்த தரவரிசை எண்/ இட ஒதுக்கீட்டு விதி/ காலிப்பணியிடங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட தற்காலிக தெரிவாளர்களின் பட்டியல் தேர்வாணைய இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பிற்கான நாள், நேரம் மற்றும் விவரங்கள் அடங்கிய அழைப்புக் கடிதத்தினை விண்ணப்பதாரர்கள் தேர்வாணைய இணையதளமான **www.tnpsc.gov.in** – லிருந்து பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பிற்கு அழைக்கப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கு அதற்கான விவரம் SMS மற்றும் E–mail மூலம் மட்டுமே தெரிவிக்கப்படும். மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பிற்கு அழைப்பாணை தனியே தபால் மூலம் அனுப்பப்படமாட்டாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பிற்கு பங்கேற்க அழைக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் எழுத்துத்தேர்வில் அவரவர் பெற்ற மதிப்பெண்கள் / ஒட்டுமொத்த தரவரிசை / இடஒதுக்கீட்டு விதிகள் / விண்ணப்பத்தில் அளித்துள்ள தகவல்கள் மற்றும் காலிப்பணியிடங்களுக்கு ஏற்ப பணி நியமனம் வழங்கப்படும். மேலும் மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பிற்கு அழைக்கப்படும் அனைவருக்கும் பணி நியமனம் வழங்கப்படும் என்பதற்கான உறுதி அளிக்க இயலாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

விண்ணப்பதாரர்கள் மேற்படி மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பிற்கு பங்கேற்க தவறினால் அவர்களுக்கு மறுவாய்ப்பு வழங்கப்பட மாட்டாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ச. கோபால சுந்தர ராஜ், இ.ஆ.ப. ,
செயலாளர்

**No: 18 /2024** **Date: 31.01.2024**

# TAMIL NADU PUBLIC SERVICE COMMISSION

**No.3, TNPSC Road – Chennai 600 003.**

## Press Release

The Tamil Nadu Public Service Commission in its Notification No.14/2023 dated 18.07.2023 had invited applications for selection of candidates for appointment by direct recruitment to the post of Assistant Training Officer (Stenography-English) in Tamil Nadu Employment Training Subordinate Service and Junior Technical Assistant in Textile Department in Tamil Nadu General Subordinate Service. The Written examination was held on 05.10.2023 F.N. & A.N. and 06.10.2023 F.N. and results were published on 28.11.2023. In order to verify the genuineness of claim of the candidates made in their online applications regarding age, qualification, community etc., and to fill up the vacancies for the said posts, the Physical Certificate Verification for the post of Assistant Training Officer (Stenography-English) in Tamil Nadu Employment Training Subordinate Service and Junior Technical Assistant in Textile Department in Tamil Nadu General Subordinate Service to be held on 08.02.2024 F.N. at the O/o. Tamil Nadu Public Service Commission, No.3, TNPSC Road, (Near Broadway Bus Stand and Fort Railway Station) Chennai – 600 003.

The list of candidates who have been provisionally admitted for the Physical Certificate Verification have been shortlisted based on merit, overall rank, rule of reservation of appointments and number of vacancies and the same have been hosted in the Commission's website. The candidates should bring all essential original certificates as per the claim made in their Online application. Candidates are hereby informed to download the Memorandum of Admission to Certificate Verification through the Commission's web-site viz www.tnpsc.gov.in and also directed to attend the Physical Certificate Verification on the scheduled date / time without fail. The candidates are also informed through SMS and E-mail only. **Memorandum of Admission to Certificate Verification to the candidates will not be sent by post.**

The allotment to the post is strictly subject to availability of vacancies in their respective reservation categories when they reach their turn as per their rank, rule of reservation and subject to their eligibility. Therefore the candidates called for Physical Certificate Verification are not assured of being allotted to the said posts.

Candidates who do not appear for Physical Certificate Verification on the scheduled date and time allotted to them will lose their opportunity and they will not be given any further chance to appear for the same.

S.Gopala Sundara Raj, I.A.S.,
Secretary